T-11/2/2022 V AND A - II - CCT - C70
computer file No. 5073741/2022

SUTHANTHIRA THIRUNAAL AMUDHA PERUVIZHA
TAMIL NADU

75 சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

14 FEB 2022

மனித வள மேலாண்மை (நி.சீ. III) துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை- 600 009.
பிலவ, தை 11
திருவள்ளுவர் ஆண்டு 2053

கடித எண். 38193 / நி.சீ. 3 /2021 - 1, நாள் 24.01. 2022

அனுப்புநர்
திருமதி. மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப,
அரசு செயலாளர்.

E-1996772/22

O/o the Commissioner of Commercial Taxes
Chepauk
14 FEB 2022
Chennai-5

பெறுநர்
தலைமைச் செயலக அனைத்து துறைகள் மற்றும்
அனைத்து துறை தலைமைகள்,
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,
பதிவாளர் உயர்நீதிமன்றம்,
பதிவாளர், சென்னை உயர்நீதிமன்றக் கிளை, மதுரை.

Pl, Circulate all PIOs
14/2/2022

ஐயா / அம்மையீர்,

பொருள்: அரசு அலுவலகங்களிலுள்ள அனைத்து துறை பொதுத் தகவல் அலுவலர்கள் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர்கள் உரிய காலக்கெடுவிற்குள் தகவல் அளிக்க கோருதல் – தொடர்பாக.

*******

தகவல் பெறும் உரிமை சட்டம், 2005-ன் பிரிவு 6(1)-ன்கீழ் பெறப்படும் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனுக்களுக்கு குறித்துரைக்கப்பட்ட 30 நாட்களுக்குள் பொதுத் தகவல் அலுவலரால் பதில் வழங்கப்படுவதில்லை எனவும், பெரும்பாலான பொதுத் தகவல் அலுவலர்கள் மனுவில் என்ன தகவல் கேட்கப்பட்டுள்ளது என்பதை கவனத்தில் கொள்ளாமல் தவறான திசை திருப்பும் தகவல்களை வழங்குவதாகவும், மனுவில் கேட்கப்பட்ட தகவல்களுக்கு சம்மந்தமில்லாத வழக்கினை மேற்கோள் காட்டி தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட 30 நாட்களுக்குள் தகவல் வழங்க மறுப்பதாகவும், இதனால், தகவல் பெறும் உரிமைச் சட்டப் பிரிவு 19(1) மற்றும் 19(3)-ன்கீழ் மேல்முறையீடு செய்யும் நிலை ஏற்படுவதுடன் மனுதாரருக்கு காலவிரயமும், பணவிரயமும் ஏற்படுவதாகவும் அரசுக்கு தொடர்ந்து புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன.

2. 2005-ஆம் ஆண்டைய தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் நோக்கம் பொதுமக்களிடையே சென்றடைவதற்கு ஏதுவாக அனைத்து தலைமைச் செயலகத் துறைகள் மற்றும் அனைத்து துறைத் தலைமைகள் ஆகியோருக்கு பின்வரும் அறிவுறுத்தங்கள் வெளியிடப்படுகின்றன:-

(i) தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் பெறப்படும் மனுக்களுக்கு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட 30 நாட்களுக்குள் மனுதாரருக்கு தகவல்

தபியா...

வழங்கப்பட வேண்டும் (ii) ஆவணங்களின் நகல்களை வழங்குவதற்காக தகவல் பெறும் உரிமைச் சட்டப் பரிவு 7(1)-ன்படி குறித்துரைக்கப்பட்ட 30 தினங்களுக்குள் வகுத்துரைக்கப்பட்ட கட்டணம் செலுத்துவதின் பேரில், மனுதாரருக்கு உரிய நகல் வழங்கப்பட வேண்டும் (iii) மனுதாரரால் கோரப்பட்ட தகவல்கள் மற்றொரு பொது அதிகார அமைப்பு சார்ந்தது எனில், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(3)-ன்படி சம்மந்தப்பட்ட பொது அதிகார அமைப்பிற்கு உரிய நடவடிக்கைக்காக 5 நாட்களுக்குள் மாற்றம் செய்யப்பட வேண்டும் (iv) மனுதாரரால் செய்யப்படும் தகவல் பெறும் உரிமைச் சட்டப் பிரிவு 19(1)-ன்படியான மேல்முறையீட்டு மனுவிற்கு மேல்முறையீட்டு அலுவலரால் மனுதாரருக்கு 30 நாட்களுக்குள் பதில் வழங்கப்பட வேண்டும்.

3. மேலும், இப்பொருண்மை குறித்து அரசுக்கோ அல்லது தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கோ மேற்கொண்டு புகார்கள் வராத வண்ணம் செயல்படுமாறு அனைத்து பொதுத் தகவல் அலுவலர்களும், முதல் மேல்முறையீட்டு அலுவலர்களும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

தங்கள் உண்மையுள்ள,

அரசு செயலாளருக்காக. 27/1/22

25/1/22